1992 ஏப்ரல் 20]

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினை முந்தைய காலத்திலிருந்தது என்று சொன்னார்கள். இது முந்தைய காலத்தில் இருந்ததுதான். ஆனால் நம் ஒப்பற்ற புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் கிராம மக்களுடைய நலனே தன்னுடைய நலனாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினால் இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து விரைவாக இந்தக் குறைபாடுகளை நீக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்கு பின்னாலேதான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய உறுப்பினர் தொகுதியிலுள்ள மாதாபட்டணம், செல்லப் பிள்ளையார்குளம் மற்றும் பாப்பான்குளம் போன்ற பகுதிகளிலுள்ள மின் அழுத்தக்குறைவினை சீர் செய்வதற்கு உடனடியாக நிதி வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்று தெரிவித்தேன். ஆகவே, வெகு விரைவில் இந்தப் பணிகள் துவங்கப்பட்டு அந்தப் பகுதியினுடைய மின் அழுத்தம் சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 562, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

562—

பாலம் கட்டுதல்.

* 9856—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்தில் உள்ள திருமணஞ்சேரிக்குச் செல்லும் பாதையின் பாலம் கட்டும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) இந்த பாலத்திற்கு இந்த நிதியாண்டில் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

(இ) பாலம் கட்டும் வேலை எப்பொழுது ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திட்டம் ஏதுமில்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

முற்பகல் 10—15

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் எப்போது ஆரம்பிக்கப்பட இருக்கிறது, இதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எப்போது பணிகள் துவங்கப்படும் என்ற விவரங்களை அறிய நம்பிக்கையோடு இந்தக் கேள்வியைக் கேட்டேன். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் ‘இந்தக் கேள்விக்கு இடமில்லை’ என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பாலத்தைப் பொறுத்த வரையில் 1966 ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திரு. இராமையா அவர்கள் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு, அதிலிருந்து இன்றைய வரைக்கும் தொடர்ந்து இந்தப் பாலத்திற்காக அந்தப் பகுதி மக்கள் போராடி வருகிறார்கள். தஞ்சையையும் அறந்தாங்கியையும் இணைக்கிற பெரிய போக்குவரத்துப் பாலமாக, ஏறத்தாழ ஒரு இலட்சம் மக்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு முக்கிய பாலமாக இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே இருக்கிற திருமணஞ்சேரி என்கிற ஊரில் பிரசித்தி பெற்ற ஆலயம் இருக்கிறது. அங்கே ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருமணங்கள் ஆண்டுதோறும் நடைபெறுகிறது. ஆகவே இந்த முக்கியத்துவத்தை எல்லாம் கருத்திற்கொண்டு, மாண்புமிகு அமைச்சரவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்களுடன் கலந்து கொண்டு, இந்த நிதி ஆண்டில் எப்படியும் இந்தப் பாலத்தை அமைத்துத் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் அமைக்கப்பட வேண்டிய சாலை, கறுக்காகுறிச்சி சாலையாகும். இதன் மதிப்பீடு 80 இலட்சம் ரூபாய். இந்தப் பாலம் கட்ட வேண்டுமானால் அதற்கு அரசு ஒதுக்க வேண்டிய தொகை 80 இலட்சம் ரூபாய் என்ற காரணத்தாலும், இது ஊராட்சி ஒன்றிய சாலையாக இருக்கிற காரணத்தாலும் பகுதி 2 திட்டத்தின்கீழ் இதை எடுத்துச் செய்ய இயலவில்லை. இன்றைக்கு இருக்கிற நிதி ஆதாரங்களைப் பொறுத்த வரையில், சென்ட்ரல்ரோட் பன்ட் ஸ்கீமில் இதைச் சேர்த்திருக்கிறோம். ஆகவே பெரிய பாலங்களைக் கட்டும்போது, மத்திய அரசு தரும் நிதி ஆதாரங்களை வைத்துத்தான் கட்ட முடியும். ஆகவே நம்முடைய திட்டத்தில் இல்லை என்றாலும்கூட, சென்ட்ரல் ரோட் பன்ட் ஸ்கீமின்கீழ் இதைச் சேர்த்திருக்கிறோம். ஆகவே மத்திய அரசு அனுமதி கிடைத்தவுடன், அதற்கான பணிகளை மேற்கொண்டு செய்ய இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1992 ஏப்ரல் 20]

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய அனுமதியை எதிர்பார்த்து இந்தப் பாலம் ஏறத்தாழ ஒன்பது ஆண்டுக்காலமாக காத்திருக்கிறது. இன்னும் பல ஆண்டுகள் காத்திருக்கச் சொல்லி நம்முடைய அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். இரண்டு தினங்களுக்கு முன்பு நான் அந்த ஆற்றின் குறுக்கே சென்றேன். 30 பேர், சுடு மணலில் சைக்கிளை தள்ளவும் முடியாமல் நடக்கவும் முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்ததை என்னால் பார்க்க முடிந்தது. மிகவும் பரிதாபத்திற்குரிய அந்தப் பகுதி மக்கள் மிகவும் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிதி ஆண்டில், பாலங்களுக்கு என்று ஆறு கோடி ரூபாயை தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறதென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிலே 80 இலட்சம் ரூபாய் என்பது மிகவும் குறைவான தொகைதான். ஆகவே எண்பது இலட்சம் ரூபாயை அந்த நிதியிலிருந்து ஒதுக்கி, மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்த நிதி ஆண்டிலேயே அதைத் துவங்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, ஆறு கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டில், நான் ஏற்கெனவே இந்த அவையிலே தெரிவித்திருப்பதுபோல, நம்முடைய ஒப்பற்ற புரட்சித் தலைவினுடைய காலம்தான் பொற்காலம் என்பதை நீங்கள் இன்றைக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத்தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எங்கு பார்த்தாலும் சாலைகள் போடப்படுகின்றன, அதுவும் தரமுள்ள சாலைகள் என்று என்னிடத்திலே சொல்லும்போது உண்மையிலேயே இந்த அரசு எவ்வளவு தூரம் நடவடிக்கை எடுக்கிறது என்பதை நீங்கள் ஆக்கப் பூர்வமாக உணர்ந்திருக்கிறீகள். இருந்தாலும், அனைத்து ஊர்களுக்கும் சாலை வசதி, பாலம் வசதி செய்ய வேண்டுமென்பது நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களுடைய விருப்பம். நம்மிடத்திலே இருக்கிற நிதி ஆதாரங்களைப் பொறுத்த மட்டிலே, இன்றைக்கு அதிக செலவிலே வருகின்ற பாலங்களை எடுத்துச் செய்கின்ற நேரத்திலே, முன்னுரிமை வழங்கப்பட முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்தேன். ஆகவே, இந்தப் பகுதி மக்களுடைய குறைகளை, கோரிக்கைகளை நம்முடைய முதல்வரவர்கள் அறிவார்கள். அடுத்த ஆண்டிலாவது இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இந்த அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.